# நானாட்டான் பிரதேச சபை

## மன்னார் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 11 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மே 05 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஜுன் 05 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, நானாட்டான் பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நானாட்டான் பிரதேச சபையின் நிலைவரத்தையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்படடிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | வருமானங்கள் | | செலவினங்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
| குறைத்துக் கூறல்கள் | 01 | 6,340 | 02 | 1,981,032 | - | - |
| அதிகரித்துக் கூறல் | - | - | - | - | 01 | 23,058 |

### 1.3.2 கணக்காய்வுக்குச் சான்றுகள் இன்மை

கணக்காய்விற்குத் தேவையான தகவல்களும் சான்றுகளும் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 4,536,563 பெறுமதியுடைய 03 மீதிகளை கணக்காய்வின் போது சான்றுறுதிப் படுத்தமுடியாதிருந்தது.

### 1.3.3 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை நிதி, நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் IX விதி 180 இன் படி காசு, களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்புள்ள அலுவலரிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை நிதி, நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் III விதி 81 ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் காணிக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முத்திரைத் தீர்வைகள் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணங்களில் மீளளிப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கத் தவறியமை.

(இ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை நிதி, நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் V விதி 140 ரூபா 199,979 உரிய திகதியில் முற்பணம் செலுத்தத் தவறும்போது செயலாளர் நடவடிக்கை எடுக்காமை.

(ஈ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை நிதி, நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் VII விதி 166 பிரதான பேரேட்டிற் பதிதற் பொருட்டு குறிப்புப் புத்தகம் ஒன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபத்தின் 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 சபையின் 07 வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) 2012 நவம்பர் 28 திகதியிடப்பட்ட IAI/2002/02 திறைசேரிச் சுற்றறிக்கையின்படி கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்களிற்கு பதிவேடுகள் பேணப்படவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் வருமானத்திலும் கூடிய செலவின மிகையாக ரூபா 8,340,546 ஆக விளைந்திருப்பதுடன் இதற்கு நேரெதிரான முன்னைய ஆண்டின் செயற்பாடு செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 1,298,369 ஆகவும் விளைந்திருந்தது.

**2.2 நிதி முகாமைத்துவம்**

(அ) வரவுசெலவுத் திட்டம் சரியான முறையில் தயாரிக்கப்படாமையினால் செலவினங்களில் மிகையும் சேமிப்பும் வருமானங்களின் பற்றாக்குறையும் மேலதிகமும் ஏற்பட்டுள்ளது.

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1** மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம மற்றும் வருமான நிலுவை

பிரதேச சபையால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் திரண்ட நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | 31.12.2012 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| (i) | வீதவரிகளும் வரிகளும் | 360,000 | 168,050 | - |
| (ii) | வாடகைகள் | 2,825,830 | 1,807,188 | 574,520 |
| (iii) | உரிமங்கள் | 414,000 | 298,590 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 11,396,340 | 12,302,380 | 103,075 |

**2.3.2 முத்திரைத் தீர்வை**

ரூபா 5,276,396 பெறுமதியான முத்திரைத் தீர்வைப் பட்டியல் காணிப் பதிவாளர் நாயகத்திடம் இருந்து பெறப்பட்டுள்ள போதிலும் அதனைப் பெற்றுக் கொள்வதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 நீதிமன்றத் தண்டப் பணங்கள்**

மீளாய்வாண்டில் வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதவான் நீதிமன்றங்களில் இருந்து பெறவேண்டிய தண்டப்பணத்தில் 2012 ஒக்ரோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களிற்கான தொகையான ரூபா 359,000 கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 பதவியணியினர் கடன் அறவீடு

பதவியினர் கடன் நிலுவையான ரூபா 3,800 நீண்ட காலமாக அறவிடப்படாமல் உள்ளதுடன் இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 தீர்க்கப்படாத செல்மதியாளர்

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் இருந்த சில்லறைக் கடன் கொடுத்தோர் தொகையாகிய ரூபா 109,146 ஆண்டின் இறுதியிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

### 2.5 ஒப்பந்த நிருவாகம்

யுனிசெப் வேலைத்திட்டத்தின் கீழ் இலந்தமோட்டை நீர்த்தாங்கி அமைத்தலுக்காக ரூபா 2,674,185 ஒதுக்கப்பட்டு குறித்த வேலையானது 2013 ஜனவரி 11 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2013 மே 11 ஆந் திகதி பூர்த்தியாக்கப்பட்டது. இருந்த போதிலும் 2014 மார்ச் 27 ஆந் திகதி வரை குறித்த நீர்த்தாங்கி பொது மக்களின் பாவனைக்கு ஆரம்பிக்காமையும் இருப்பது அவதானிக்கப்பட்டது.

### 2.6 உள்ளகக் கணக்காய்வு

பிரதேச சபை நடவடிக்கைகள் சம்பந்தமாக போதுமானளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கடடுப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) வருமானச் சேகரிப்பு

(ஆ) நிலையான சொத்துக்கள்

(இ) கணக்கீடு

(ஈ) வாகனங்களின் பயன்பாடு

(உ) வரவு செலவுத்திட்டம்

(ஊ) நன்கொடை

(எ) நானாவித வைப்புகள்